**த. நா.ச.பே. எண் : 015** **நாள் : 25.09.2015**

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கைகள் **– 25.9.2015**

---

## உள் (நீதிமன்றங்கள்) துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்டு மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் எனது தலைமையிலான அரசு, வழக்கு தொடுப்போருக்கு நீதி விரைவாக கிடைக்கப் பெற வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, புதிய நீதிமன்றங்களை உருவாக்குவதிலும், நீதிமன்றங்களுக்கு கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவதிலும் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது.

நீதித் துறை செவ்வனே செயல்படவும், நிலுவையிலுள்ள வழக்குகளுக்கு விரைவில் தீர்வு காணவும் புதிய நீதிமன்றங்களை உருவாக்கி குடிமக்களுக்கு விரைவான நீதி வழங்குவதில், தமிழக அரசு முன்னோடியாக விளங்கி வருகிறது. கடந்த நான்காண்டுகளில் 170 புதிய நீதிமன்றங்கள் 134 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

நடப்பாண்டில் ஏற்படுத்தப்படும் புதிய நீதிமன்றங்கள் பற்றிய அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. சார்நிலை நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு விரைவில் தீர்வு காண லால்குடி, கீரனூர், ஓமலூர், பரமத்தி மற்றும் ஆண்டிப்பட்டி ஆகிய இடங்களில் தலா ஒரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மதுரையில் மூன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள், கோயம்புத்தூரில் இரண்டு கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள், மணப்பாறை, அருப்புக்கோட்டை மற்றும் திருமங்கலத்தில் ஒரு கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் என மொத்தம் பதிமூன்று மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள்; வாடிப்பட்டி, ஆண்டிப்பட்டி, ஓமலூர், கீரனூர், கும்பகோணம், பெரம்பலூர், தாம்பரம், ஆலந்தூர் மற்றும் பத்மநாபபுரம் ஆகிய இடங்களில் தலா ஒரு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் வீதம் ஒன்பது குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் என மொத்தம் 22 நீதிமன்றங்கள் 9 கோடியே 57 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. நீதிமன்றங்களில் தற்போது நிலுவையில் உள்ள ஏராளமான வழக்குகளை துரிதமாக முடிப்பதற்கு விரைவு நீதிமன்றங்களை அமைப்பது அவசியமாகிறது. எனது தலைமையிலான அரசு, மாநிலத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்த வழக்குகளைப் பிரத்யேகமாக விசாரிக்க 22 மகளிர் விரைவு நீதிமன்றங்களை Fast Track Mahila Courts 16 கோடியே 60 லட்சம் ரூபாய் செலவில் அமைத்துள்ளது. மேலும், அனைத்து மாவட்டங்களிலும் தலா ஒரு மகளிர் நீதிமன்றம் அமைக்கப்பட்டு அவை சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. திருநெல்வேலி மாவட்டம், தென்காசியில் 32 லட்சத்து 97 ஆயிரம் ரூபாய் செலவில் மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில்,

ஒரு விரைவு நீதிமன்றம் அமைக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. தற்போது தேனி மாவட்டம் தேனியிலும், ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியிலும், திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியிலும், கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோயிலிலும், விழுப்புரம் மாவட்டம் விழுப்புரத்திலும், திண்டுக்கல் மாவட்டம், பழனியிலும், சேலம் மாவட்டம் மேட்டூரிலும், தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்திலும், வேலூர் மாவட்டம் வேலூரிலும் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம் காஞ்சிபுரத்திலும் மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் 10 விரைவு நீதிமன்றங்கள் 5 கோடியே 32 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுமக்களின் வழக்குகளை விரைந்து முடிக்க இந்த அறிவிப்புகள் வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*****

## <u>உள் (போக்குவரத்து) துறை</u>

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சாலைப் பாதுகாப்பினை மேம்படுத்துவதிலும், வாகனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப சேவைகளை அதிகரிப்பதிலும், வாகனங்களினால் ஏற்படும் மாசினைக் கட்டுப்படுத்துவதிலும், அரசின் வருவாயைப் பெருக்குவதிலும் முக்கியப் பங்கினை வகிக்கும் போக்குவரத்துத் துறையினை மேம்படுத்தி அதன் மூலம் மக்களுக்கு சிறந்த சேவை அளிக்கும் நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு கடந்த நான்கு ஆண்டுகளாக எடுத்து வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் போக்குவரத்துத் துறையில் செயல்படுத்தவிருக்கும் திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகரங்களிலும் போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளது. பகுதி அலுவலக எல்லையில் உள்ள பொதுமக்கள் போக்குவரத்து வாகனத்திற்கான புதிய அனுமதிச் சீட்டு, அனுமதிச் சீட்டு புதுப்பித்தல், வரி மேற்குறிப்பு, வரி நிலுவையில்லாச் சான்று, மறு பதிவு கோப்புகளுக்கான அனுமதி, தடையில்லாச் சான்று மற்றும் பன்னாட்டு ஓட்டுநர் உரிமம் போன்ற பல்வேறு பணிகளுக்கு அப்பகுதியைச் சார்ந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு அதிக தூரம் பயணம் செய்ய வேண்டிய நிலையைத் தவிர்க்கும் வகையில், போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை, மக்கள் தொகை ஆகியவற்றை கணக்கில் கொண்டு, காஞ்சிபுரம் மாவட்டம் – ஸ்ரீபெரும்புதூர், சேலம் மாவட்டம் – மேட்டூர், திண்டுக்கல் மாவட்டம் – பழனி, விருதுநகர் மாவட்டம் – சிவகாசி மற்றும் தூத்துக்குடி மாவட்டம் – கோவில்பட்டி ஆகிய பகுதி அலுவலகங்கள் 3 கோடியே 73 லட்சம் ரூபாய் செலவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாக தரம் உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. மாவட்ட தலைநகருக்கு இணையாக சில மாவட்டங்களின் இதர பகுதிகளிலும், மக்கள் தொகை, தொழில் வளர்ச்சி, போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை

ஆகியன பெருமளவில் அதிகரித்துள்ளன. அப்பகுதி மக்கள், ஓட்டுநர் உரிமம், நடத்துநர் உரிமம், புதிய வாகனம் பதிவு செய்தல், போன்ற பணிகளுக்கு சுமார் 15 கிலோ மீட்டர் முதல் 40 கிலோ மீட்டர் வரை தூரம் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது. இதனால் ஏற்படும் கால விரயத்தை தவிர்த்து பொதுமக்களும், வாகன உரிமையாளர்களும் பல்வேறு சேவைகளை உடனுக்குடன் பெறும் வகையில் 2 கோடியே 12 லட்சம் ரூபாய் செலவில் திண்டுக்கல் மாவட்டம்–நத்தம், புதுக்கோட்டை மாவட்டம்–ஆலங்குடி மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம்–திருக்கழுக்குன்றம் ஆகிய இடங்களில் புதிய பகுதி அலுவலகங்கள் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்காணும் அறிவிப்புகள், பொதுமக்கள் போக்குவரத்துத் துறையின் சேவைகளை எளிதில் பெறுவதற்கு வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*****

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**